ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# நாட்டுப் புறப்பாடல்களும் மக்கள் வாழ்வியலும்

**ம. கஸ்தூரி & முனைவர் அ. கலீல்ரெஹ்மான்**

**தமிழ்த்துறை,**

**காதிர்முகைதீன்கல்லூரி, அதிராம்பட்டினம்**

**ஆய்வுச் சுருக்கம்**

நாட்டுப்புற இலக்கியமானது மக்களோடு இரண்டறக் கலந்துள்ளவை. தங்களின் வாழ்வியல், அவை சார்ந்த தொழில்கள், கலைகள், பக்தி முதலானவற்றை வெளிப்படுத்துவதாக நாட்டுப்புறப் பாடல்கள் அமைந்துள்ளன. இவ்வகைப் பாடல்கள் தான் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் வாயில்களாகவும் அமைகின்றன. இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களை, இயற்கைப் பாடல்களாகவும் அம்மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களைப் பல்வேற வகையாகப் பிரிக்கலாம். தாலாட்டுப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், காதல் பாடல்கள், தொழிற்பாடல்கள் முதலானவற்றில் நாட்டுப்புற மக்கள் தங்கள் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்வுகளை, உள்ளவற்றை உள்ளவாறே வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றில் அவர்களின் வாழ்வியல் அமைந்துள்ள விதத்தை இக்கட்டுரையானது விவரித்துள்ளது.

**ஆய்வு நோக்கம்**

நாட்டுப்புறவியல் என்னும் களம் மிகப் பரந்து விரிந்தது. அவற்றில் எண்ணிலடங்கா நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டிருப்பதை நாம் அறிவோம். நாட்டுப்புற மக்கள் தங்களின் வாழ்க்கையில் நேரடியாக அனுபவித்தவற்றையே தங்கள் இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர். நாட்டுப்புறவியல் குறித்த ஆய்வுகளும் எண்ணிலடங்கா. அவற்றில் ஒரு பிரிவாக பாடல்கள் உள்ளன. அந்தப் பாடல்களில் மக்களின் வாழ்வியல் எத்தனை நிலையில் இடம்பெற்றுள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** நாட்டுப்புற இலக்கியம், நாட்டுப்புறவியல், நாட்டுப்புறப் பாடல்கள், மக்களின் வாழ்வியல் , ஒப்பாரி பாடல்களில் வாழ்வியல் , தாலாட்டுப் பாடல்களில் வாழ்வியல், தொழில் பாடல்க பாடல்களில் வாழ்வியல்.

**முன்னுரை**

நாட்டுப்புற இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே காட்டும் கண்ணாடியாகும். மக்கள் தங்கள் வாழ்க்கையில் அன்றாடம் மேற்கொள்ளும் வாழ்வியலையே இலக்கியமாகத் தருகின்றனர்.

**“நாட்டுப்புற இலக்கியமானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ அதைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும்”** (நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 22) என்னும் முனைவர் சு. சக்திவேல் அவர்களின் கூற்று நாட்டுப்புற இலக்கியங்கள் குறித்த தெளிவை நமக்கு உணர்த்தும். இத்தகைய இலக்கியங்களே, மக்களின் வாழ்வியல் நிலைகளைச் சமுதாயத்திற்குப் பல நிலைகளில் கொண்டு சேர்க்கிறது. நாட்டுப்புற இலக்கியங்கள் அனைத்துமே மண் மனம் பரப்பும் சிறப்புடையன. அத்தகைய இலக்கியங்கள் 1.நாட்டுப்புறப் பாடல்கள் 2.நாட்டுப்புறக் கதைகள் 3.நாட்டுப்புறப் பழமொழிகள் 4.விடுகதைகள் 5.புராணங்கள் எனப் பல நிலைகளில் அமைந்துள்ளன. இவற்றில் நாட்டுப்புறப் பாடல்கள் எவ்வாறு மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்துள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**நாட்டுப்புறப் பாடல்கள்**

மக்கள் தங்கள் வாழ்க்கையில் அனுபவிக்கும் சுக, துக்க உணர்வுகளை உள்ளவாறே தங்கள் பாடல்களில் பதிவு செய்திருப்பர். இந்தப் பாடல்கள் பல வகையாக அமைந்திருக்கும். தாலாட்டுப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், காதல் பாடல்கள், தொழிற்பாடல்கள் என்பன போன்றவை அவை. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பாடும் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களில் உண்டு. குழந்தைப் பிறந்து வளர தாலாட்டு அமைவது போல் வாழ்வின் கடைசிப் பாதையாம் இறப்பிற்கு ஒப்பாரி இருக்கிறது. இவை ஒவ்வொன்றுமே நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு ஒன்றிப் பிணைந்திருப்பதே நாட்டுப்புறப் பாடல் என்பதற்கு,

**“நாட்டுப்புறப் பாடல்கள் முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குகின்றன. நாட்டுப்புறப் பாடல்களை இயற்கைப் பாடல்கள் எனலாம். இயற்கை அன்னை தன்னை முகம் பார்க்கத் தேர்ந்தெடுத்த தெளிவான கண்ணாடி நாட்டுப்புறப் பாடல்கள்”** (மேலது, ப. 29) என்று கூறுகிறார் டாக்டர் சு. சக்திவேல். இவற்றை நோக்கும்பொழுது, நாட்டுப்புறப் பாடல்களைப் பாடக் கூடியவர்கள் அந்தந்த மண்ணின் மைந்தர்களாகவே இருப்பர் என்பது திண்ணம். அப்படிப் பாடப்படும் பாடல்களில் அவர்களின் பாடுபடும் திறனும், வாழ்வியலும் வெளிப்படும். இந்நாட்டுப்புறப் பாடல்கள் இன்று நேற்றுத் தோன்றியதாக நாம் வரையறுத்துவிட முடியாது. ஏனெனில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே இவை வழங்கப்பட்டு வந்துள்ளமையை,

**“பாட்டு உரைநூலே வாய்மொழி பிசியே**
**அங்கதம் முதுசொல்லொடு அவ்வேழ் நிலத்தும்”**

- (தொல். செய். 79)

என்னும் தொல்காப்பிய நூற்பாவழி அறியலாகிறது. இவ்வகையான நாட்டுப்புறப் பாடல்கள் பல்வேறு வகைகளாகப் பகுக்கப்படுகின்றன. நாட்டுப்புற ஆய்வறிஞர்கள் ஒவ்வொருவரும் பகுப்பிலும் பல்வேறு வேற்றுமைகள் காணப்படுகின்றன.

இவற்றில் டாக்டர் சு.சக்திவேல் அவர்கள் சூழல் அடிப்படையில் 1.தாலாட்டுப் பாடல்கள் 2.குழந்தைப் பாடல்கள் 3.காதல் பாடல்கள் 4.தொழில் பாடல்கள் 5.கொண்டாட்டப் பாடல்கள் 6.பக்திப் பாடல்கள் 7.ஒப்பாரிப் பாடல்கள் 8.பன்மலர்ப் பாடல்கள் என எட்டாகப் பிரித்துள்ளார்.

**தாலாட்டுப் பாடல்களில் வாழ்வியல்**

மனிதன் பிறந்து, முதன்முதலாகக் கேட்கும் பாடலே தாலாட்டு. இந்தத் தாலாட்டுப் பாடல் என்பது தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே அமைகிறது. “தாலாட்டில் தாய்மையின் தவிப்பும் பூரிப்பும் எதிர்பார்ப்புகளும் வைகறையின் வசந்தங்களும் இறைவனின் இனிய நாமங்களும் வரலாற்றுப் பெட்டகங்களும் நிறைந்திருப்பதைக் காணலாம்” என்பார் டாக்டர் சு.சக்திவேல். ‘தாலாட்டு’ என்பது பிள்ளைத்தமிழ் எனும் சிற்றிலக்கியத்தில் ‘தாலேலோ’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தாலாட்டு இலக்கியம், குழந்தையை சமாதானப்படுத்த மட்டும் பாடப்படுவது இல்லை. தாலாட்டும் தாயின் மனநிலை முழுவதும் இதில் எதிரொலிக்கும். அந்தத் தாய் தான் பட்ட பாடுகளையெல்லாம், குழந்தைக்குப் புரிகிறதோ இல்லையோ தன் தாலாட்டின் வழியாக வெளிக்காட்டி விடுவாள். பெண்ணிற்குப் பிறந்த வீட்டில் அனுபவித்த இன்பமும், புகுந்த வீட்டில் படும் துன்பமும் தாலாட்டின்போது கரைபுரண்டோடும் நினைவாக வந்து கொண்டிருக்கும். அத்தகைய நினைவுகளையே எதுகை, மோனைச் சுவையோடு தன் தாலாட்டில் வெளிக்காட்டிவிடுவாள் தாய். குழந்தை இல்லாதபோது, ஒரு பெண் எம்மாதிரியான துன்பங்களை அனுபவித்தாள் என்பதை, தனக்கு ஒரு பிள்ளை பிறந்த பின்பு அதற்குப் பாடும் தாலாட்டில் கூறுகிறாள்.

“**கிண்ணியிலே போட்ட சோற்றைக்**
**கீறித் தின்னப் பிள்ளை இல்லை**
**ஊருக்குப் போகையிலே**

**உடன்வரப் பிள்ளை இல்லை”** (மேலது, ப. 45)

என்று தன் சோகத்தைத் தாலாட்டில் பிழிந்துவிடுகிறாள் தாயொருத்தி. பிள்ளை இல்லையெனப் போகாத கோயிலுக்கெல்லாம் சென்று பிரார்த்தனைகள் செய்த நிலையை,

**“எட்டாத கோவிலுக்கு, எட்டி விளக்கேற்றி**
**தூரத்துக் கோவிலுக்குத், தூண்டா விளக்கற்றி**
**சோதி பரதேசிகளுக்குத், தூமடமும் கட்டி வைத்து**
**நல்ல தண்ணீர்க் கிணறுகளும்... கட்டி வைத்து”**

(மேலது, ப. 45)

என்று பாடுகின்றாள். தாலாட்டு தாய்க்குரிய இலக்கியமாகையால் அதில் தாய்மாமனின் பெருமையும் அவர்கள் தரும் சீர்வரிகைளின் சிறப்பும் இடம்பெற்றிருக்கும். பெண்ணுக்குரிய குணநலன்களில் முக்கியமானது தன் தாய்வீட்டுச் சிறப்பைப் பேசுவது. இதில் அனைத்துப் பெண்களும் ஒரே மாதிரியே இருப்பர்.

**“வெள்ளியால் செய்த ஏட்டில்**
**வைர எழுத்தாணி கொண்டெழுத**
**பள்ளியில் சேர்க்க மாமன்**
**பரிவுடன் வந்திடுவார்”** (மேலது, ப. 45)

என்னும் பாடலில் தன் குழந்தை முதன்முதலில் பள்ளியில் சேர்ப்பதற்காக, தன் சகோதரன் வருவான் என்பதை பெருமிதத்தோடு கூறுகிறாள் அந்தத் தாய். இன்றைக்கும் தாய்மாமன் சீர் என்பது மிகவும் பெருமை மிக்க ஒன்றாகவே சமுதாயத்தில் நினைக்கப்படுகிறது.

### குழந்தைப் பாடல்களில் வாழ்வியல்

வளர்ந்து வரும் குழந்தைகள் தங்கள் மனத்தில் இருக்கும் செய்திகளை மற்ற பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடும்பொழுது பகிர்ந்து கொள்வர். அவர்களின் நினைவாற்றல், உடல் - மன வளர்ச்சி சார்ந்தனவாகவே குழந்தைகப் பாடல்கள் அமையும். இந்தக் குழந்தைப் பாடல்கள் பற்றி,

“குழந்தைப் பாடல்களுக்குப் பதவுரை, நயவுரை என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. பெரும்பாலான குழந்தைப் பாடல்களில் பொருளுள்ள பாடல்களைக் காண

முடியாது. ஓசை நிறைவுள்ள பாடல்களே அதிகம் காணப்படும். இப்பாடல்களை எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிமையும் இனிமையும் இருக்கும். வட்டார வழக்குச் சொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் நிறையக் காணலாம்" எனும் டாக்டர் ஆறு. அழகப்பன் கூற்று குழந்தைப் பாடல்கள் பற்றிய தெளிவை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

**"சடுகுடு மயிலைலே ரெண்டானே**
**தவறி விழுந்தது கிழட்டானே**
**தூக்கி விட்டது இளவட்டம்**
**இளவட்டம் இளவட்டம்"** (மேலது, ப. 48)

என்பது விளையாட்டின்போது குழந்தைகள் பாடக்கூடிய பாடலாக அமைகிறது. குழந்தைகள் நினைவுத்திறனை வளர்ப்பதாக,

**"ஒரு குடம் தண்ணிமொண்டு**
**ஒரே பூ பூத்ததாம்**
**இரண்டு குடும் தண்ணிமொண்டு**
**இரண்டே பூ பூத்ததாம்……"** (மேலது, பக். 48-49)

என்னும் பாடல் அமைகிறது. இவை போன்ற குழந்தை சமுதாயத்தில் எந்தக் கவலையும் இல்லாமல் உடலும், மனமும் வளர்ச்சியடைய பெரிதும் உதவுவதாக அமைகிறது இத்தகைய பாடல்கள்.

**காதல் பாடல்களில் வாழ்வியல்**

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள். அவ்வாறு ஒருவனுடைய மனத்தில் காதல் வந்துவிட்டால், அது எவ்வகையிலாவது வெளிப்பட்டுவிடும். மனித இனம் என்று தோன்றியதோ அன்றே காதலும் தோன்றியிருக்க வேண்டும். ஆகையால்தான் தமிழ் இலக்கியங்கள் காதலைக் கொண்டாடி மகிழ்ந்துள்ளன. தமிழில் தோன்றியுள்ள இலக்கியங்களுள் பெரும்பான்மை அகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளதையும் நாம் காண்கிறோம்.

"மனிதன் பிறக்கும்போதே அவ்வுணர்வு தன்னோடு இருப்பினும் பருவம் அடையும்போது அவ்வுணர்வு மலர்ந்து மணம் வீசுகிறது. அவ்வுணர்வுகளை வெளிக்காட்டும் வடிகாலாக இக்காதல் பாட்டுகள் உள்ளன" (மேலது, ப. 50) என்பர் உளவியலார். இவ்வகையில் காதல் உணர்வு மனிதனுக்குள்ளேயே இன்றியமையா உறுப்புகள் போல் அமைந்திருக்கக் கூடியது என்பதை மறுப்பதற்கில்லை.

நாட்டுப்புறக் காதல் பாடல்கள் பெரும்பாலும் தொழில் செய்யும் இடங்களில் பிறக்கக் கூடியனவாக உள்ளன. காதல் பாடல்களின் கருப்பொருளாக, உறவில்

இன்பம் காண்பதும் பிரிவில் வேதனையடைவதும் என்பதாக அமைகிறது. இலக்கியக் காதலும், நாட்டுப்புறக் காதலும் ஒரே மாதிரி இருந்தாலும் வெளிப்படுத்தும் நிலையில் வேறுபடுகிறது. தன் அன்புக் காதலியை வருணித்துத் தேர் பார்க்க வரும்படி ஆசையுடன் காதலன் அழைக்கிறான்.

**“அன்ன நடையழகி, அலங்கார உடையழகி**
**பின்னல் நடையழகி – செல்லம்மா**
**புறப்படம்மா தேரு பார்க்க”**

என்று அவன் பாட, அதற்கு அவள்,

**“மதன வடிவழகா, மாமோகச் சொல்லழகா**
**வண்ண வடிவழகா – என் ஆசை மச்சானே**
**வரமாட்டேன் தேரு பார்க்க”** (மேலது, ப. 51)

என்கிறாள். ஆண் எந்த நேரத்திலும் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். பெண்ணுக்கென்று தனிக் கட்டுப்பாடுகள் சமுதாயம் விதித்திருக்கிறது. அவள் நினைத்த நேரத்தில் எல்லாம் வெளியில் சென்று வரமுடியாது என்பதை மேற்கூறிய பாடல் வெளிப்படுத்துவதாக உள்ளது.

இன்பத்தை மட்டுமல்லாமல் துன்பத்தையும் காதல் பாடல்களில் காணலாம். பரத்தையர் தொடர்பு, கள்ளக்காதல், மனக்கருத்து வேறுபாடு ஆகிய காரணங்களால் கணவன், மனைவியரிடையே உறவு முறிவதுண்டு. அவ்வாறு உறவு முறிந்த பெண்ணொருத்தி தன் மனக் குமுறலைப் பாட்டாக வடிக்கின்றாள்.

**“கூடினமே கூடினமே, கூட்டு வண்டிக் காளைபோல**
**விட்டுப் பிரிஞ்சமையா, ஒத்த வண்டிக் காளைபோல”**

- (மேலது, ப. 52)

என வரும் இப்பாடல் அப்பெண் எத்தகைய துன்பத்தை அனுபவிக்கிறாள் என்பதை புலப்படுத்தும்.

**தொழில் பாடல்களில் வாழ்வியல்**

மனிதன் தன் அடிப்படைய உரிமைகளைப் பெறுவதற்கு அவனுக்கு உறுதுணையாய் இருப்பது அவனின் தொழில். இந்தத் தொழில் அவரவரின் தகுதிக்கேற்றவாறும் சூழலுக்கேற்றவாறும் மாறுபடும். அவ்வாறு செய்யும் தொழிலின் சுமை தெரியாமல் இருக்க, அவனின் வாழ்வின் சூழல்கள் கொண்டு பாடப்படும் பாடல்களைத் தொழில் பாடல்கள் எனலாம்.

"மனிதர்கள் கூடித் தொழில் செய்யும்போது அக்கூட்டுறவிலே பிறப்பது தொழில் பாடல்கள். தொழில் பாடல்களிலே அன்பு மலர்வதையும், பாசம் பொங்குவதையும், உழைப்பின் ஆர்வத்தையும் நன்மையில் ஈடுபாட்டையும், தீமையில் வெறுப்பையும் காண்கிறோம். தொழில் பாடல்கள் தொழிலாளர்களது இன்ப துன்பங்களையும் நெஞ்சக் குமுறல்களையும் ஆபாசங்களையும் விருப்பு வெறுப்புகளையும் வெளியிடுகின்றன" (மே., ப.52)

என்று தொழில் பாடல்கள் குறித்து டாக்டர் சு. சக்திவேல் கூறுகின்றார்.

**"மண்ணை நம்பி ஏலேலோ,**
**மரம் இருக்கு – ஐலசா**
**மரத்தை நம்பி ஏலேலோ**
**கிளையிருக்க – ஐலசா**
**கிளையை நம்பி ஏலேலோ**
**கோல் இருக்க – ஐலசா……"**

என்னும் படகுக்காரன் பாட்டு, அவனின் மனத்தில் இருக்கும் காதலை மட்டுமின்றி, உலகிலிருக்கும் பொருட்கள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்துதான் தன் வாழ்நாளைக் கழிக்கின்றன என்பதைப் புலப்படுத்துவதாக உள்ளது.

**ஒப்பாரிப் பாடல்களில் வாழ்வியல்**

இறந்தவர்களை நினைத்து, அவர்களின் உறவுக்காரர்கள் அவர்கள்மீது பாடுவது ஒப்பாரி. இறந்தவர்களின் இழப்பை எண்ணி, இறந்தவர்களையும் தம்மையும் ஒப்பிட்டுப் பாடுவதும் ஒப்பாரியாகும்.

**"வாழ்வின் முன்னுரை தாலாட்டு. ஆனால் முடிவுரை ஒப்பாரியாகும். தாலாட்டு கலங்கரை விளக்கமானால், ஒப்பாரி நினைவுச் சின்னமாகும். தாலாட்டும் ஒப்பாரியும் பெண்குலத்தின் படைப்பாகும்"** (மேலது, ப. 59)

என்னும் டாக்டர் சு.சக்திவேல் அவர்களின் கூற்று ஒப்பாரியை பற்றிக் கூறுவதாக அமைகிறது.

மனிதன் தனக்குப் பிடித்த பொருள் ஏதாவது தொலைந்துவிட்டாலே, அதை மறக்க முடியாமல் தவிக்கும் குணம் கொண்டவனாக இருப்பான். அது உயிராக இருக்கும் பட்சத்தில், அதன் கொடுமையைத் தாங்கமுடியாமல் அழுது அதனை வெளிப்படுத்துவான். ஆண்கள் பெரும்பாலும் தங்கள் துக்கத்தை மனதிற்குள்ளேயே வைத்துக் கொள்பவர்களாகவும், பெண்கள் தன்னோடு சேர்ந்த நாலு பேரோடு

சொல்லி ஆற்றக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர். ஒரு பெண் உலகத்தில் எந்த உறவையும் இழந்து, அதிலிருந்து மீண்டுவிடுவாள். தன்னுடைய கனவாகவும், நனவாகவும் இருந்து வந்த கணவனின் இறப்பை ஆற்ற முடியாதவளாகவே இருப்பாள்.

**"தாலி பெருஞ்சரடு**
**தாழம்பூ நச்சரடு**
**தாலி மேல் கைவச்சா**
**தாளாதய்யா எம்மனசு!**
**மாலையோ பெருஞ்சரடு**
**மகிழம்பூ நச்சரடு……"**

என்று தன் அவலத்தை எண்ணி ஒப்பாரி வைக்கிறாள். இவ்வாறு தன் வாழ்வாதாரமாகிய கணவன் இறந்தவுடன் ஒரு பெண் தன் நிலையை எண்ணி வாடும் நிலை இப்பாடலில் வெளிப்படுகிறது.

**முடிவுரை**

இவ்வாறு நாட்டுப்புறப் பாடல்கள் அனைத்தும் பல வகையாகப் பிரிந்திருந்தாலும் அவை மக்களின் வாழ்வியலைப் பதிவிடும் நிலையிலேயே அமைந்துள்ளன. அதுமட்டுமின்றி, மக்களின் வாழ்க்கையை உள்ளவாறே எடுத்துரைப்பதாகவும் இப்பாடல்கள் அமைந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை என்றே கூற வேண்டும். அவற்றை நாமும் அனுபவித்து இன்புறுவோம்! பிறரையும் கற்று இன்புறச் செய்வோம்!

**துணை நூற்பட்டியல்**

1. அழகப்பன் ஆறு., - நாட்டுப்புறப் பாடல்கள்,
பாரி நிலையம்,
சென்னை, பதிப்பு – 2010.

2. சக்திவேல் சு. (டாக்டர்) - நாட்டுப்புற இயல் ஆய்வு,
(பதிப்பு. ச.வே. சுப்பிரமணியன்) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை, பதிப்பு – 1979.

,

3. சுப்பிரமணியன், ச.வே. - தொல்காப்பியம் (தெளிவுரை),
(முனைவர்) மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை 17, 8-ம் பதிப்பு – 2006.